இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 21-01-2025

# இனி தொடங்கக் கூடாது

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஆன போர் முடிவுக்கு வந்திருக்கிறது. இனி அது தொடங்கக் கூடாது என்பது தான் உலக சமுதாயத்தின் வேண்டுகோள் ஆகும்!**

இஸ்ரேல் - ஹமாஸ் படையினர் இடையிலான போர் கடந்த பதினைந்து மாதங்களாக நடைபெற்று வந்தது. 2023 ஆம் ஆண்டு அக்டோபர் - 7 முதல் தொடர்ச்சியாக போர் நடந்து வருகிறது. இந்தப் போரை ஆறு வார காலத்துக்கு நிறுத்துவதற்கான ஒப்பந்தம் ஜனவரி 19 முதல் தொடங்கி இருக்கிறது.

பாலஸ்தீனத்தின் காசா முனைப் பகுதியில் செயல்படும் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதால் தொடங்கியது இந்தப் போர். 1200 பேர் கொல்லப்பட்டதாகவும், 250 பேரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றதாகவும் இஸ்ரேல் அப்போது சொன்னது. இதனைக் காரணமாக வைத்து காசாவில் மிகப்பெரிய தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியது. 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இது தொடங்கியது. அனைத்து வகையான தாக்குதலையும் காசா மீது தொடுத்தது இஸ்ரேல். ஹமாஸ் அமைப்பினர் உள்பட இதுவரை 46 ஆயிரம் பேர் உயிரிழந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு வாழும் பாலஸ்தீன மக்களில் 90 விழுக்காடு பேர், தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

இப்போரை நிறுத்துவதற்கான முயற்சிகள் பல முறை எடுக்கப்பட்டது. 2023 நவம்பர் மாதம் ஏழு நாட்கள் போர் நிறுத்தம் செய்யப்பட்டது. "நான்கு நாட்கள் போர் நிறுத்தத்தின் போது காசாவில் பிணைக் கைதிகளாக உள்ள 50 பெண்கள் மற்றும் சிறார்கள் விடுவிக்கப்படுவார்கள். அந்த நாட்களில் மோதல் ஏற்படாது. மீதமுள்ள கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்படுவார்கள். போர் நிறுத்தம் ஒவ்வொரு நாளாக நீட்டிக்கப்படும்" என்று இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டது.

**'இஸ்ரேலில் உள்ள பாலஸ்தீனக் கைதிகளை விடுவித்தால் நாங்கள் எங்கள் வசம் இருக்கும் இஸ்ரேல் கைதிகளை விடுவிக்கத் தயார்' என்று ஹமாஸ் படையினர் சொன்னதால்தான் இந்த ஏழு நாள் போர் நிறுத்தம் ஏற்பட்டது.**

இதை ஏற்று இஸ்ரேல் சிறையில் இருந்து 240 பாலஸ்தீனக் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். 105 இஸ்ரேல் பிணைக் கைதிகளை ஹமாஸும் விடுவித்தது. இருதரப்பு நல்லெண்ணமும் தொடரவில்லை. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'இஸ்ரேல் தாக்குதலால் ஹமாஸ் படையினருக்கு ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக தற்காலிக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது' என்று கிண்டல் அடித்தார். 'போரை நிரந்தரமாக நிறுத்தவில்லை. ஹமாஸ் படையினரை ஒழிக்கும் வரை போர் தொடரும்' என்றும் இஸ்ரேல் சொன்னது. எனவே மீண்டும் போர் தொடங்கியது. ஓராண்டு காலம் மீண்டும் போர் நடந்தது.

இப்போது ஆறு வாரங்களுக்கான போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. கத்தாரில் கடந்த வாரம் ஒரு சமாதானப் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதில் இஸ்ரேல் - ஹமாஸ் ஆகியவை பங்கேற்றன. இதன்படி ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

**★ காசாவில் மொத்தமுள்ள 100 பிணைக் கைதிகளில் 33 பேரும், இஸ்ரேல் சிறையில் உள்ள நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியர்களும் 6 வாரங்களில் விடுவிக்கப்படுவார்கள்.**

**★ காசாவில் இருந்து இஸ்ரேல் தனது படைகளை விலக்கிக் கொள்ளும்.**

**★ இஸ்ரேல் ராணுவ வீரர்கள் உள்பட மீதமுள்ள பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தை பின்னர் தொடரும்.**

- என்பவையே இவர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம் ஆகும். ஆறு வார கால போர் நிறுத்தத்துக்கு இவை பயன்படுமே தவிர, நிரந்தரப் போர் நிறுத்தத்துக்கான கொள்கை முடிவுகள் இதில் இல்லை.

இஸ்ரேல் - ஹமாஸ் ஆகிய இரண்டு தரப்பும் தனது அரசியல் கொள்கை நிலைப்பாடுகளில் இருந்து இறங்கி வந்து விட்டது என்று சொல்வதற்கான எந்தச் செய்தியும் இந்த ஒப்பந்தத்தில் இல்லை.

இஸ்ரேலியப் படைகள் காசா பகுதியில் இருந்து வெளியேறும் வரை இந்தப் போர் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கப் போகிறது. அத்தகைய செய்தி ஏதும் இந்த ஒப்பந்தத்தில் இல்லை. 'ஹமாஸ் அமைப்பு கலைக்கப்படும் வரை தாக்குதலைக் கைவிட மாட்டோம்' என்று வெளியில் சொல்லி வருகிறது இஸ்ரேல். இது அமைதி எண்ணங்களுக்கு மாறான நிலைப்பாடு ஆகும். இத்தகைய இஸ்ரேலை நம்பி ஹமாஸ் அமைப்பினர் அமைதியாகவும் மாட்டார்கள்.

**இந்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்காவும், அரபு ஊடகங்களும் தங்கள் விருப்பத்துக்கு செய்திகளை வெளியிட்டு வருகிறார்கள். 'இஸ்ரேல் அடிபணிந்துவிட்டது' என்று ஒரு தரப்பும், 'ஹமாஸ் விட்டுக்கொடுத்துவிட்டது' என்று இன்னொரு தரப்பும் எழுதி வருகிறது. ட்ரம்ப் பதவியேற்கும் முன் சாதித்துவிட்டார் என்றும் சிலர் எழுதுகிறார்கள். இஸ்ரேல் பிரதமருக்கு தந்து வரும் ஆதரவை வாபஸ் பெறப் போகிறோம் என்று அங்குள்ள கூட்டணிக் கட்சியானது சொல்லி வருகிறது. இது போன்ற வெளிப்புற சக்திகள் அடுத்தடுத்து என்ன செய்ய இருக்கிறார்கள் என்பதை வைத்துத்தான் இந்த அமைதி ஒப்பந்தம் உயிர் வாழும்.**

இதனை உணர்ந்து ஐ.நா. உள்ளிட்ட உலகளாவிய அமைப்புகள் இதனை நிரந்தர போர் நிறுத்தமாக மாற்றுவதற்கு வழிவகை காண வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.1.2025) முகாம் அலுவலகத்தில், அரசு வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட அலுவலர்கள் ஆகியோர் பொங்கல் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன், மூத்த வழக்கறிஞரும், நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (19.1.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நடிகர் சத்யராஜ் அவர்களின் மகளும் – ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார். அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### நடிகர் சத்யராஜின் மகள்

## திவ்யா சத்யராஜ் கழகத்தில் இணைந்தார்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

சென்னை, ஜன. 21 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நடிகர் சத்யராஜின் மகளும் ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் தி.மு.க.வில் இணைந்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு:

முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (19.1.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நடிகர் சத்யராஜ் அவர்களின் மகளும் - ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

## இட ஒதுக்கீட்டு வரம்பை 50 சதவிகிதத்திற்கு மேல் உயர்த்திட காங்கிரஸ் போராடும்!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உறுதி!

பாட்னா , ஜன. 21 -

**இடஒதுக்கீட்டு வரம்பை தற்போதைய 50 சதவீதத்திற்கு மேல் உயர்த்த காங்கிரஸ் போராடும் என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.**

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பீகார் மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. ஆகியவை அரசியலமைப்பிற்கு எதிரானவை எனக் கூறினார். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தும் என்றும் அதன் அடிப்படையில், மக்களின் பிரதிநிதித்துவத்தை நிர்ணயித்த பிறகு 50 சதவீத இடஒதுக்கீடு உச்ச வரம்பு நீக்கப்படும் என்றும் அவர் உறுதி அளித்தார்.

இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு சாதியும் அதன் பங்கைப் பெற வேண்டும் என்றும், அனைவரும் சமம் என்று கூறும் அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம் இதுவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



அரசியல் சாசனத்துக்கும், மனுதர்மத்துக்கும் இடையேயான போரை தேசம் பார்த்து வருவதாகக் கூறிய அவர், நாடு 1947ல் சுதந்திரம் அடைந்ததை ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் நம்பவில்லை என்றும் அரசியல் சாசனம் மீதும் அவர் நம்பிக்கை வைக்கவில்லை என்றும் ராகுல் காந்தி விமர்சித்தார். வன்முறை மற்றும் வெறுப்பை பரப்பும் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கூட்டணிக்கு எதிரான போராட்டம் சித்தாந்த ரீதியானது என்றும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் தலித், சிறுபான்மையினர் மற்றும் சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரே 90 சதவீதம் உள்ளனர். ஆனால் அரசு துறைகள் மற்றும் பிற உயர்பதவிகளில் அவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படுவதில்லை. அவர்களுக்கு சம உரிமையை பெற்றுத் தரவே ஜாதி வாரி கணக்கெடுப்பை நடத்த காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

பிகாரில் முதல்வர் நிதீஷ் குமார் தலைமையிலான அரசு நடத்திய சாதிவாரி கணக்கெடுப்பு மக்களை முட்டாளாக்கும் செயல். அதைப் போல் அல்லாமல் மக்களின் வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் தேசிய அளவிலான சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவேண்டும்.

தேர்தலில் 400 தொகுதிகளுக்கு மேல் வெல்வோம் என ஒவ்வொரு பிரசாரத்திலும் பா.ஜ.க. மூத்த தலைவர்கள் தெரிவித்து வந்தனர்.

ஆனால் நமது கூட்டு முயற்சியால் பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்கச் செய்யாமல் தடுத்துவிட்டோம். இதனால் அரசமைப்புச் சட்டத்தை தூக்கி எறிய முயன்ற பிரதமர் மோடி தனது முயற்சியில் தோல்வியடைந்தார். மாறாக அரசமைப்புச் சட்டத்துக்கு தலை வணங்கினார்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டிய பிறகே நாட்டுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாக ஆர், எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் கூறுவது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரான கருத்து. அரசமைப்புச்சட்டத்தை பாதுகாக்கும் காங்கிரஸுக்கும் அதற்கு எதிராக வெறுப்புணர்வை பரப்பும் பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு இடையே அரசியல் ரீதியாக மோதல் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

### நைஜீரியாவில்

## பெட்ரோல் லாரி வெடித்து விபத்து! தீயில் கருகி 60 பேர் பலி!

அபுஜா, ஜன. 21 –

நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவையும் வடக்கு நகரமான கடுனா நகருடன் இணைக்கும் சந்திப்பில் 60,000 லிட்டர் பெட்ரோலுடன் சென்ற கொள்கலன் லாரி தடம்புரண்டு விபத்தானது. கொள்கலன் லாரி கவிழ்ந்து விபத்தானதையறிந்த அப்பகுதி மக்கள், பெட்ரோலுக்காக முண்டியடித்துச் சென்றனர்.

இந்தச் சமயத்தில், லாரி கவிழ்ந்து வெடித்தது. பெட்ரோலைச் சேகரிப்பதற்காகக் கூடியிருந்த சுமார் 60க்கும் மேற்பட்டோரும் இந்த விபத்தில் பலியாகினர். விபத்தில், பலரும் அடையாளம் காண முடியாத அளவுக்கு தீயில் கருகியதாகவும், பலரும் காயமடைந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நைஜீரியா ஆளுநர் உமாரு பாகோ கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் பெரியாளூர் ஊராட்சி பெரியாளூர் மேற்கு அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் புதிய கலையரங்கம் அமைப்பதற்கான இடத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு தேர்வு செய்தார்.